பொருளடக்கம்

*

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16

முன்னுரை / 21

1 வுளூவைப் பற்றிய விளக்கம் / 25

2 வுளூவின் மகத்துவம் / 29

3 அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் வுளூ
ஒரு வருணனை / 37

4 நிய்யத் - மனதில் தீர்மானம் / 41

5 தஸ்மிய்யா - அல்லாஹ்வின் பெயரை மொழிதல் / 43

6 மணிக்கட்டுகளைக் கழுவுதல் / 47

7 வாய் கொப்பளித்தலும் மூக்கிற்கு நீர் செலுத்தலும் / 49

8 முகத்தைக் கழுவுதல் / 53

9 முழங்கைகள் உட்பட கைகளைக் கழுவுதல் / 56

10 தலையை, காதுகளை, தலைப்பாகையை மஸஹ் செய்தல் / 59

11 பாதங்களையும் கணுக்கால்களையும் கழுவுதல் / 64

12 ஸிவாக் / 71

13 அத்தல்க் – உடம்பின் பாகங்களைத்
தண்ணீரினால் தேய்த்தல் / 73

14 இறைவசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்
வரிசை முறைப்படி வுளூ செய்தல் / 74

15 அல்மவாலாத் – ஒவ்வோர் உறுப்பையும் முந்தியதை அடுத்து
மற்றதை இடையில் கால தாமதமின்றி உடனே கழுவுதல் / 76

16 அத்தமாயின் – வலது பக்கத்திலிருந்து ஆரம்பித்தல் / 78

17 தண்ணீரைப் பயன்படுத்துவதில் வீண்விரயம்
செய்யாமல் சிக்கனமாக இருத்தல் / 79

18 வுளூவின் பின் ஓதும் துஆ / 81

19 கழுவுகின்ற எண்ணிக்கை / 83

20 ஒவ்வொரு தொழுகையின் போதும் வுளூ செய்வது விரும்பத்தக்கது / 85

21 சிறுதுடக்கு ஏற்பட்டதா என்று சந்தேகத்தில் இருப்பவர் எதில் உறுதிகொள்ள வேண்டும்? / 87

22 ஆணும் பெண்ணும் ஒரே பாத்திரத்தில் வுளூ செய்தல் / 89

23 ஒட்டக இறைச்சியைச் சாப்பிட்ட பின்னர் வுளூ செய்தல் / 90

24 வுளூ செய்தபின் உறுப்புகளைத் துடைத்துக்கொள்ளுதல் / 91

25 வுளூவை முறிக்கும் செயல்கள் / 93

முடிவுரை / 100

1

வுளூவைப் பற்றிய விளக்கம்

*

அறபு மொழியில் வுளூ

- اَلْوُضُوْءُ - வாவி(ு)ற்க்கு ழம்மு (ُ) செய்யப்பட்டு வந்தால் அது உடல் உறுப்புகளைச் சுத்தம் செய்கின்ற செயலையும்,
- اَلْوَضُوْءُ - வாவி(ு)ற்க்கு ஃபதஹ் (َ) செய்யப்பட்டு வந்தால் அது உடல் உறுப்புகளைச் சுத்தம் செய்கின்ற தண்ணீரையும் குறிக்கும்.

அதாவது, வுளூ என்ற சொல் அந்தச் செயலையும், அதற்காக உபயோகிக்கப்படும் தண்ணீரையும் குறிக்கும். அது ஒரு வினைப் பெயராகவும் இருக்கின்றது. அல்லது ஒரே சொல்லின் இரண்டு அமைப்புகளாக, இரண்டு வினைப் பெயரைக் குறிக்கக்கூடியதாக இருப்பதோடு, உபயோகிக்கப்படும் நீரைக் குறிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது.

ஷரீஆவில் வுளூ

வுளூ என்பது அல்லாஹ் தஅலா நிர்ணயித்து விளக்கியுள்ள படி உடம்பின் சில பகுதிகளின்மீது சுத்தமானதும் தூய்மைப் படுத்துவதுமான (தஹூர்) தண்ணீரை உபயோகிப்பதாகும்.

3

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் வுளூ ஒரு வருணணை[7]

*

உஸ்மான் ﵁ அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் பின்வருமாறு:

عَنْ عُثْمَانَ ، رَضِيَ اللَّهُ عَنْهُ [أَنَّهُ سُئِلَ عَنِ الْوُضُوءِ] [أَنَّهُ قَالَ:أَلا أُرِيكُمْ كَيْفَ كَانَ وُضُوءُ رَسُولِ اللهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ ؟] [قَالَ هَلُمُّوا أَتَوَضَّأُ لَكُمْ وُضُوءَ رَسُولِ اللهِ صلى الله عليه وسلم] (وَهُوَ بِفِنَاءِ الْمَسْجِدِ فَجَاءَهُ الْمُؤَذِّنُ عِنْدَ الْعَصْرِ) [عِنْدَ بَابِ الْمَسْجِدِ]، أَنَّهُ دَعَا بِإِنَاءٍ(بِوَضُوءٍ) [بِمَاءٍ] [أَظُنُّهُ سَيَكُونُ فِيهِ مُدٌّ] [بِفُخَّارَةِ مَاءٍ] [فَأُتِيَ بِمِيضَأَةٍ] ، (وَهْوَ جَالِسٌ عَلَى الْمَقَاعِدِ) [عَلَى الْبَلاَطِ] [فِي مَوْضِعِ الْجَنَائِزِ]، (وَعِنْدَهُ رِجَالٌ مِنْ أَصْحَابِ رَسُولِ اللَّهِ -صلى الله عليه وسلم-) [طَلْحَةُ وَالزُّبَيْرُ وَعَلِيٌّ وَسَعْدٌ]، (فَتَوَضَّأَ) [وَهُمْ يَنْظُرُونَ] [قَالَ أَلاَ أُرِيكُمْ وُضُوءَ رَسُولِ اللَّهِ -صلى الله عليه وسلم-] فَأَفْرَغَ [فَأَهْرَاقَ] [فَسَكَبَ] [فَأَصْغَاهَا عَلَى يَدِهِ الْيُمْنَى] [فَأَفْرَغَ بِيَدِهِ الْيُمْنَى عَلَى الْيُسْرَى] عَلَى كَفَّيْهِ (يَدَيْهِ مِنْ إِنَائِهِ) ثَلاَثَ مِرَارٍ، فَغَسَلَهُمَا [فَغَسَلَ يَدَيْهِ ثَلاَثًا ثَلاَثًا كُلَّ وَاحِدَةٍ مِنْهُمَا] [إِلَى الْكُوعَيْنِ] ،ثُمَّ أَدْخَلَ يَمِينَهُ فِي الإِنَاءِ ثُمَّ (فِي الْوَضُوءِ)، فَمَضْمَضَ [ثَلاَثًا]، وَاسْتَنْشَقَ [ثَلاَثًا] (وَاسْتَنْثَرَ) [ثَلاَثًا]، غَسَلَ وَجْهَهُ ثَلاَثًا (ثَلاَثَ مَرَّاتٍ) [وَخَلَّلَ لِحْيَتَهُ ثَلاَثًا]، وَيَدَيْهِ [ذِرَاعَيْهِ] (ثُمَّ غَسَلَ يَدَهُ الْيُمْنَى) (ثُمَّ غَسَلَ يَدَهُ الْيُسْرَى) إِلَى الْمِرْفَقَيْنِ [الْكُوعَيْنِ] [حَتَّى مَسَّ أَطْرَافَ الْعَضُدَيْنِ] ثَلاَثَ مِرَارٍ ، ثُمَّ [أَدْخَلَ يَدَهُ، فَأَخَذَ مَاءً] مَسَحَ بِرَأْسِهِ (رَأْسَهُ) [إِلَى قَفَاهُ] [مَرَّةً] [وَاحِدَةً]

7 இந்தத் தலைப்பு மூலநூலில் இல்லாததாகும். உஸ்மான் இப்னு அஃப்பான் ﵁ அவர்கள் அறிவித்து மிகவும் பிரபலமான இந்த ஹதீஸை இந்நூலாசிரியர் பல இடங்களில் ஆதாரங்களுக்காகக் குறிப்பிடுகிறார். வுளூவின் முறை களைப்பற்றி ஒரே செய்தியில் மிகச் சுருக்கமாக அறியச் செய்வதற்காக நாம் இதை இங்கு ஒரு முன்னோட்டமாக இணைத்துள்ளோம். (ப.கு.)

15

அல்மவாலாத் – ஒவ்வோர் உறுப்பையும் முந்தியதை அடுத்து மற்றதை இடையில் கால தாமதமின்றி உடனே கழுவுதல்

*

அல்மவாலாத் (اَلْمُوَالَاةُ): ஓர் உறுப்பிற்கு அடுத்து மற்ற உறுப்பு என்று தொடர்ச்சியாக இடைவெளி இல்லாமல் செய்ய வேண்டும்.

நபி ﷺ அவர்கள் உடல் உறுப்புகளைக் கழுவுவதற்கு மத்தியில் நீண்ட நேரம் இடைவெளி விட்டார்கள் என்று எந்த உறுதிசெய்யப்பட்ட ஹதீஸும் இல்லை.

أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ عُمَرَ بَالَ فِي السُّوقِ, ثُمَّ تَوَضَّأَ، فَغَسَلَ وَجْهَهُ، وَيَدَيْهِ، وَمَسَحَ رَأْسَهُ, ثُمَّ دُعِيَ لِجَنَازَةٍ لِيُصَلِّيَ عَلَيْهَا حِينَ دَخَلَ الْمَسْجِدَ، فَمَسَحَ عَلَى خُفَّيْهِ، ثُمَّ صَلَّى عَلَيْهَا

இப்னு உமர் ؓ அவர்கள் சந்தையில் உட்புறத்தில் சிறுநீர் கழித்த பின்னர் வுளூ செய்து முகத்தையும் கைகளையும் கழுவி விட்டுத் தலையையும் மஸஹ் செய்து துடைத்தார்கள். பின்னர் அவர்கள் பள்ளிவாசலுக்குள் நுழையும்போது ஒரு ஜனாஸா தொழுகையை நடத்த அழைக்கப்பட்டார்கள். எனவே, அவர்கள் தமது காலுறையின்மீது மட்டும் மஸஹ் செய்துவிட்டு தொழுகை நடத்தினார்கள். (அல்மூஅத்தா மாலிக் *101*)[25]

வுளூவின்போது இத்தகைய இடைவெளிகளை விடுவது பிழை என்று தாபிஈ அதாஉ[26] ؒ அவர்கள் கருதவில்லை.

25 அறிவிப்பவர்: மாலிக் (இல 72), அல்பைஹகீ (1:84)

26 அதாஉ இப்னு அபீ ரபாஹ் அவர்கள் ஹிஜ்ரீ 25 வாக்கில், உஸ்மான் ؓ ஆட்சிக்காலத்தில் பிறந்தவர். நபித்தோழர்கள் இப்னு அப்பாஸ், அபூ ஹுறைறா, ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ؓ போன்றவர்களை மக்காவில்

17

தண்ணீரைப் பயன்படுத்துவதில் வீண்விரயம் செய்யாமல் சிக்கனமாக இருத்தல்

*

۞ 55 ۞

அனஸ் ﷺ கூறியதாவது:

كَانَ رَسُول اللهِ - صلى اللهُ عليه وسلَّم - يَتَوَضَّأُ بِالْمُدِّ, وَيَغْتَسِلُ بِالصَّاعِ إِلَى خَمْسَةِ أَمْدَادٍ

நபி ﷺ அவர்கள் ஒரு முத் நீரினால் வுளூ செய்து, ஒரு ஸாஉ அல்லது ஐந்து முத் அளவு வரை நீரினால் குஸ்லு செய்வார் கள். (புகாரீ 201, முஸ்லிம் 325)

ஒரு ஸாஉ: நான்கு முத்துகளுக்குச் சமமாகும்.

ஒரு முத்: இரண்டு கைகளைச் சேர்த்துப் பெற்றுக்கொள்ளக் கூடிய அளவு நீராகும்.

எனது முஸ்லிம் சோதரரே! இந்த ஹதீஸை நன்றாகக் கருத்தில் கொண்டீர்களானால், இக்காலத்தில் மக்கள் சிலர் செய்யும் செயல்களைப் பற்றி வெட்கமடைவீர்கள். ஒருவர் தண்ணீர்க் குழாயைத் திறந்து வுளூ செய்து கொண்டும் அதே சமயம் சிலநேரங்களில் தனது சகாவுடன் பேசிக்கொண்டும் இருப்பார். தண்ணீர் அதன் பாட்டுக்கு ஓடிக்கொண்டிருக்கும். எத்தகைய வீண்விரயம்! இவ்வாறு செய்பவர் அல்லாஹ்வுக்குப் பயந்து இந்த ஹதீஸை ஞாபகப்படுத்தி மனதிலிருத்தி நீரை விரயம் செய்யாது சிக்கனமாகப் பயன்படுத்துவது சம்பந்தமான ஸுன்னாவைக் கடைப்பிடிக்க வேண்டும். இங்கேதான் நபி ﷺ அவர்களைப் பின்பற்றுவதும் உண்மையான முஸ்லிமின் விசுவாசமும் தெளிவாக்கப்படுகின்றன. ஸுன்னாவைப்

20

ஒவ்வொரு தொழுகையின் போதும் வுளூ செய்வது விரும்பத்தக்கது

*

வுளூ முறியாத நிலையில் வுளூ செய்வது சம்பந்தமாக அல்ஃபத்ஹு (1:172) நூலில் ஹாஃபிள் இப்னு ஹஜர் ﵀ அவர்கள் கூறுவதாவது:

۞ 61 ۞

அனஸ் ﵁ அறிவிப்பதாவது:

كَانَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَتَوَضَّأُ عِنْدَ كُلِّ صَلاَةٍ قُلْتُ: كَيْفَ كُنْتُمْ تَصْنَعُونَ؟ قَالَ: يُجْزِئُ أَحَدَنَا الوُضُوءُ مَا لَمْ يُحْدِثْ

நபி ﷺ அவர்கள் வழக்கமாக ஒவ்வொரு தொழுகைக்கும் வுளூ செய்தார்கள். நான் ஒரு நபித்தோழரிடம், 'நீங்கள் வழக்கமாக என்ன செய்தீர்கள்?' என்று கேட்டேன். அவர், 'வுளூ முறியும் வரை ஒரு முறை செய்த வுளூ எங்களுக்குப் போதுமானதாக இருந்தது' என்று கூறினார். (புகாரீ 214)

இங்குக் கடமையான தொழுகையே பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றது என்பதற்கு இந்த ஹதீஸ் சான்றாகும்.

தஹாவீ ﵀ கூறுவதாவது: அது நபி ﷺ அவர்கள்மீது பிரத்தியேகமாகக் கடமையாக்கப்பட்டு பின்னர், புரைதாவின் ஹதீஸின்படி நீக்கப்பட்டிருக்கலாம். முஸ்லிம் அறிவிப்பது போல், இதன் கருத்து நபி ﷺ அவர்கள் ஃபத்ஹு டைய தினத்தில் ஒரு முறை செய்த வுளூவுடன் எல்லாத் தொழுகையும் நிறைவேற்றினார்கள் என்பதாகும். அதைப்பற்றி உமர் ﵁ அவர்கள் நபி ﷺ அவர்களிடம் கேட்டபோது அவர்கள், 'நான் வேண்டுமென்றே அவ்வாறு செய்தேன்' என்று பதில

25

வுளூவை முறிக்கும் செயல்கள்

*

1. முன் பின் மர்மஸ்தானங்களிலிருந்து வெளியாகின்றவை

அபூ ஹுறைறா ﷺ கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இவ்வாறு மொழிந்தார்கள்:

لاَ تُقْبَلُ صَلاَةُ مَنْ أَحْدَثَ حَتَّى يَتَوَضَّأَ

உங்களில் எவரேனும் ஹதஸ் செய்திருந்தால் அவர் வுளூ செய்யும் வரை அவரது தொழுகையை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான். (புகாரீ 135, முஸ்லிம் 225)

۞ 67 ۞

أَوْ جَاءَ أَحَدٌ مِنْكُمْ مِنَ الْغَائِطِ

உங்களில் எவரும் மல ஜல உபாதைக்குச் சென்று வந்திருந் தாலோ... (குர்ஆன் 5:6)

என்ற அல்லாஹு தஅலாவின் திருமொழிக்கும்

لَا وُضُوءَ إِلَّا مِنْ صَوْتٍ أَوْ رِيحٍ

சப்தத்தைக் கேட்கின்ற வரை அல்லது நாற்றத்தை நுகர்கின்ற வரை (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, ஸுனனு இப்னு மாஜா 515, ஸஹீஹு இப்னிமாஜா 416)

என்ற நபி ﷺ அவர்களின் கூற்றுக்கும் இணங்க இரண்டு மர்மஸ்தானங்களிலிருந்தும் வெளியாகின்றவற்றால் வுளூ முறிந்துவிடுகின்றது என்று அல்மஜ்மூஃ (2:3) நூலில் நவவீ ﷺ அவர்கள் கூறுகின்றார்.